றோம் என்றாலும், இன்னும் சிறப்பாகச் செய்யக் கூடிய ஒரு திட்டம் என்பதால், அதிலே உள்ள குறைகளைக் களைவதற்கு அரசு இந்தச் சட்ட மன்றத்தில் உள்ள சட்டம் படித்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு Monitoring Cell அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் தாராள மனம் வைத்து ஏழைகளின் நலனைக் கருதி, இலவச பணியைச் செய்ய முன் வர வேண்டும். அதுதான் நல்லது. ஆனால், இந்தப் புரட்சித் தலைவர் அரசு வழக்கறிஞர்களுக்கு ஓரளவுக்கு நிதி தரவேண்டும் என்ற முறையில், ஃபீசும் தந்து அவர்களை இந்த வழக்குகளை நடத்தச் சொல்கிறது. வழக்கறிஞர்கள் இதுபோன்ற தவறுகள் செய்வதாக வழக்கறிஞர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது வேதனைப் பட வேண்டிய ஒன்றுதான். எதற்கெடுத்தாலும் போராட்டம் என்ற உணர்வு படைத்திருக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு Monitoring Cell அமைப்போம் என்றாலும், வழக்கறிஞர்கள் அதை ஏற்பார்களா, அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உத்திரவாதம் தருவார்களா என்பதே ஒரு பிரச்சினை ஆகிவிடும். வழக்கறிஞர்கள் மத்தியில் ஒரு மன மாற்றம் ஏற்பட வேண்டும். ஏழைகளைக் காக்க வேண்டும் என்பது தங்களுடைய கடமை என்ற உணர்வு அவர்களுக்கு வர வேண்டும். அந்த நிலை ஏற்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய விருப்பம்.

தமிழகத்தில் குடும்ப நீதிமன்றகள் அமைத்தல்.

29—(*வினா எண். 11575—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 'குடும்ப நீதிமன்றம்' அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய அரசு குடும்ப நீதிமன்றங்களை அமைக்கும் பொருட்டு 1984-ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தை (மையச் சட்டம் 66/84) இயற்றியுள்ளது. இந்த சட்ட விதிகளின்படி தமிழ்நாட்டில் குடும்ப கோர்ட்டுகள் அமைப்பதுகுறித்து அரசின் ஆய்வில் உள்ளது.

[1987 மார்ச் 3

(முற்பகல் 10–30)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைய இருக்கிற குடும்ப நீதிமன்றங்களுக்கு எந்த எந்த வகையான குடும்ப வழக்குகளை விசாரிக்கிற அதிகாரங்களைக் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு இந்தச் சட்டத்தின் Salient features என்ன என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. 'Family Courts are established with a view to promoting conciliation in and secure settlement of disputes relating to marriage, family affairs and matters connected therewith.' என்று குறிப்பிட்டிருக்கிறது. திருமணம் சம்பந்தமான, திருமணத்திற்குப் பிறகு கணவன் - மனைவி இடையே பூசல்கள், பிரச்சினைகள் ஏற்படுகிறபோது, குழந்தைகளைப் பராமரிப்பதிலே பிரச்சினைகள் ஏற்படுகிறபோது அவற்றில் பிரத்தியேகமாக, முழுமையாக கவனம் செலுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு மைய அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. மாநில அரசு ஏற்கனவே 1968 ஆம் ஆண்டே பெண்களுக்கு, தாய்க் குலத்திற்கு இருக்கிற குறைபாடுகளை நீக்க வேண்டுமென்ற முறையிலே இப்படிப்பட்ட அமைப்புகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை, மைய அரசுக்கு எழுதியிருக்கிறது. முதன் முதலாக அவ்வாறு எழுதியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாநிலம் முழுவதும் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே உள்ள நீதிமன்றங்களிலே வழக்குகளின் தேக்கம் தவிர்க்க முடியாத பிரச்சினையாக இருந்து வருகிறது. பல்வேறு நீதிமன்றங்களிலும் தேங்கியிருக்கிற வழக்குகளில்—இந்தக் குடும்ப நீதிமன்றங்களுக்குக் கொண்டுவரப்பட உத்தேசித்துள்ள வழக்குகள்தான்—அப்படிப்பட்ட வழக்குகள் தான் நிறையத் தேங்கிக் கிடக்கின்றன. எனவே இந்தக் குடும்ப நீதிமன்றங்கள் மாநில அளவிலே எத்தனை உருவாக்க அரசு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 3]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே இருக்கிற பெரிய பிரச்சினை நிதிப் பிரச்சினை. மைய அரசு நீதி பரிபாலனத்திற்காக ஒதுக்குகிற தொகை சொற்பமான தொகையாக இருக்கிறது. 'This has not been treated as Core sector by the Union Government.' மாநில அரசு ஆண்டுக்காண்டு அதற்காக நிதியை ஒதுக்குகிறது. பெண்கள் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் இவை என்ற காரணத்தினால் ஒவ்வொரு மாவட்டத்திலும் துவக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கமாகும். அதற்காக அரசு நிதியை ஒதுக்க இருக்கிறது.

சென்னை நகர்ப் பகுதிகளில் பல அடுக்கு மாளிகைகள்.

30—(*வினா எண். 10942) திரு. கே. உச்சி மற்றும் திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர் பகுதிகளில் தற்போது பல அடுக்கு மாளிகைகள் கட்டப்படுவதை கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) சென்னையில் அரசு (எம். எம். டி. ஏ.) அனுமதி பெறாமல் வீடுகள் கட்டப்படுவதை ஒழுங்குபடுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத் திட்ட சட்டம் 1971-ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின் கீழ் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டப்படுவது கட்டுப்படுத்தப்படுகின்றது.

(ஆ) ஆம்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சென்னையைப் பொறுத்தவரையில் எத்தனை அடுக்கு மாளிகைகள் கட்டலாம் என்பதையும், யாராவது விஷமிகள் அதை மீறுவார்களானால் அப்படி மீறியவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS